O.S.No.20/2015

PW 2 : கிருஷ்ணசாமி தேதி 26.02.2026

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 5,10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எங்கள் ஊரில் குளத்துபாளையத்தை சார்ந்த கந்தன்நாவிதன் வகையறா குலத்தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் யாரும் செம்மாண்டாம்பாளையத்தில் குடித்தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் என் அப்பா என் தாத்தா ஆகியோர் குல தொழில் செய்து வந்தோம். நாவிதன் குலத்தை சார்ந்தவர்களை மருத்துவர் என்று சொல்லமாட்டார்கள் என்றால் சரியல்ல. நாவிதன் குலம் வேறு என்றும் மருத்துவர் வேறு என்று சொன்னால் சரியல்ல. எங்கள் ஊரில் யாராவது இறந்துபோனால் எங்கள் ஜாதியை சார்ந்தவர்கள் இறுதி சடங்கு செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல செய்வோம். மருத்துவர் குலத்தில் அந்த வழக்கம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஜோதிநாதன் என் நண்பரா என்றால் சிறு வயதில் இருந்தே பழக்கமானவர். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை ஜோதிநாதன் அழைத்தன் பேரில் வந்திருக்கிறேன். என் தாத்தா மாரியாண்டியுடன் கூட பிறந்தவர்கள் மொத்தம் 3 பேர். மாரியாண்டி இறந்த போன பின்பு தான் அவருடைய சகோதரர் லிங்காண்டி இறந்து போனார் என்றால் சரிதான். மாரியாண்டி 1974 ல் இறந்து போனதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1956 க்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மாரியாண்டி இறந்ததற்கு என் தந்தை இறுதி சடங்கு செய்ததாகவும் நான் உடன் இருந்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.